மயின்மலை (குன்றக்குடி) முருகன் முறையீடு

ஆசிரியர்
சிவகங்கை மாவட்ட அமராவதிபுத்தூர்
தருமைஆதீன வித்வசிரோமணி
வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியார்

(இவரைப்பற்றிய குறிப்புகளை இவ்வலைத்தளத்தில் உள்ள இவரது
குன்றக்குடிஎன்னும் மயூரகிரிக் கலம்பகம்
தோரணவாயில் பகுதியில் காண்க)

****



உரைவிளக்கம்
குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனப்புலவர்
வித்துவான். க. கதிரேசன் எம். ஏ; பிஎட்
பூவாளூர். 621712.
அலைபேசி 09865193754.

மயின்மலை (குன்றக்குடி)முருகன் முறையீடு.

காப்பு

சீர்த்திமுறை யீடுதிகழ் செங்கைவடி வேல்கருணா
மூர்த்திமுறை யீடுநன்கு முற்றவே - ஆர்த்திவரும்
சாகைபடி வேழம் தரளம்உகுக் கும்குன்றைத்
தோகையடி வேழம் துணை.

குறிப்புரை : சீர்த்தி முறையீடு= மிகப்புகழ்வாய்ந்த வேண்டுதல்கள். முற்றவே= நிறைவுபெற. ஆர்த்தி வரும்= மகிழ்வுடன்வரும். சாகைபடி= வேதத்தில் உள்ள. வேழம்= யானைமுகன். தரளம் உகுக்கும்= முத்துகளைசிந்தும். குன்றைத் தோகையடி வேழம்= குன்றக்குடிக் குன்றின் அடிவாரத்தில் எழுந்தருளியுள்ள அருள்தரு தோகையடி விநாயகர்.

பொழிப்புரை : மிகப்புகழ்வாய்ந்த வேண்டுதல்கள் நிறைவேற்றம்பெற்ற, அருள்விளங்கும் தமது செந்தாமரை போல்சிவந்த கையில் வேலேந்திய கருணைமூர்த்தியாகிய அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருமுன்னான இவ்வேண்டுதல்நூல் சிறப்புற நிறைவுபெற; அடியவர்க்குஅருள மகிழ்வுடன் வருகிறவரும், வேதத்தில் போற்றப்பெறுகிறவரும். தமது தந்தத்தில் இருந்து முத்துகளை உதிர்ப்பவரும் ஆகிய அருள்தரு தோகையடி விநாயகப்பெருமான் துணையாவார்.

விளக்கம் : திகழ் என்பதனைச் செங்கை, வடிவேல், கருணாமூர்த்தி, முறையீடு ஆகிய நான்குடனும் தனித்தனி கூட்டுக. யானைத் தந்தத்தில் முத்துகள் விளைவதாகக் கூறுவது இலக்கியமரபு. குன்றக்குடிக் குன்று, கழுத்தை உயர்த்திப் படுத்திருக்கும் மயில்போன்ற அமைப்புடன் விளங்குவதால் மயில்மலை - மயூரகிரி என்று பெயர்பெற்றது. இக்குன்றின் ஏறுபடிகள் படுத்திருக்கும் மயிலின்தோகை போன்றவை. இதன் அடிவாரத்தில் எழுந்தருளியவர் ஆதலின் இவர் அருள்தரு தோகையடி விநாயகர் ஆயினார். (முறையீடு - தன்குறைகளைக்கூறித் தீர்க்க வேண்டுதல்.)

நூல்

(நூற்றைம்பத்திரண்டடி நேரிசை ஆசிரியப்பா)

****

ஓர்உருள் சயந்தனக் காரிருள் பகைவனின்
வாய்மலர் கிற்பன ஆய்மலர்ப் பள்ளிவிட்(டு)
அறுகால் புள்ளினம் சிறுகால் உதைத்தலின்
பிணிஅவிழ் தளவம் என்(று)அணிய பூக்குடைபு
செந்தா(து அளைஇ)ப் பைந்தேன் தெவிட்டிய
கணக்(கு)அறத் தேக்கியும் பிணக்குஅறுத்(து) ஏழிசைப்
பாட்(டு)அயர் நபம்புகு கோட்(டு)உயர் பராரைத்
தேமாங் குயிலினம் காமா வருதிஎன்(று)
அழைப்பன போல்அவண் பிழைப்பில கூவலின்
சுகப்பரி ஞாங்கரின் உகப்பொடு கேகய
மெல்லியற் கணிகையர் பல்லியல் சதுர்கொள
வந்(து)அர(சு) ஆள்நெடும் சுந்தரச் சோலைசூழ்
மயின்மலை மேவிய அயில்மலை விலோசனக்
குறக்கொடி கரிப்பிணா உறத்தழீஇ மகிழ்பெறு
கடம்(பு)அணி ஈரறு தடம்புய தயாபர
பைங்கட் செவிக்கலன் முக்கண் புராதனற்(கு)
இரும்பிர ணவப்பொருள் தரும்பிர சாரண
எண்ணிலா வஞ்சகக் கண்இலான் மதலையர்க்(கு)
அந்தகன் பின்வரும் இந்திர சூநுஆங்(கு)
ஏறிய தேரியாத்(து) ஊறிய ஓகையில்
துரகதம் நடாத்திய மரகதக் குரூஉக்கவின்
யாதவ குலேசதா மோதரன் மருக
ஆரணன் தருக்கிய திறம்எலாம் தேறிமுன்
சிரம்எலாம் கணீர்எனக் கரம்எலாம் கொண்(டு)அவன்
குட்டிச் சிறைசெயாச் சிட்டித் தொழிலினை
இயற்றிமற்(று) அதனையும் பயிற்றிய தேசிக
நாயினும் கடையேன் ஆயினும் பேரருள்
கோடலுக்(கு) அல்லனேன் பாடலுக்(கு) ஒல்லுமோ
ஆதலால் கெழுமிய காதலால் சிறியனேன்
முறையிடு பாட்டினை நிறைசெவி ஏற்குதி
தந்தைமா தாஇரு முந்தைமாக் குரவரும்
அன்புறக் கலத்தலின் இன்புறப் புறப்படும்

சுக்கில சுரோணிதம் தொக்கபோ(து) ஆவயின்
வினைவழித் தோன்றிய நினை(வு)அழி புலைஞனேன்
அ஼றிணை புகாது ப஼றவம் இழைத்தலின்
பெறற்(கு)அரும் பிறப்பினை அறல்கருங் கூந்தல்
கொடுங்கண் கூற்(று)உறழ் நெடுங்கண் காமரு
கமலநாள் மரைபுரை விமலவாள் முகஎழில்
கடல்குமி ழியைநிகர் படப்பகர் வார்முலைக்
கடுக்கைஅம் கண்ணியோன் உடுக்கையும் ஒவ்வா
வெற்றிடைச் சிற்றிடைப் பொற்றொடிப் பேதையர்
பூந்தாள் பணிந்(து) ஏமாந்(து) ஆட்படு வதற்(கு)
ஆம்பல் போது தேம்பொழிந் தென்ன
மொழிதரு மாற்றக்(கு) அழிதரு நெஞ்சகம்
உணர்ச்சியோர் வெ஼காப் புணர்ச்சிஏக் கற்று
வாளா விரகத்து மீளா நரகினின்
வீழ்ந்(து)அழி கிற்பதை ஆழ்ந்துயூ கிற்பின்
கழுவலுக்(கு) அமைந்த முழுமகன் கால்கவர்
சேற்றைப் பூசிய வாற்றைக் கடுப்ப
இம்மையும் அம்மையும் செம்மை தபுத்துக்
கந்தரம் கடவும் இந்திரன் மானப்
புரைசைக் கரிமிசை அரைசர்ஏத்(து) எடுப்பப்
பவனிபோந்(து) அகன்ற அவனி பொதுஅற
நல்ஆண் தகையொடு பல்லாண்(டு) அளித்துக்
கவிகையும் கொற்றச் சிவிகையும் சுடர்மணி
அப்பிய விண்தொடர் திப்பிய சதனமும்
சதுர்விதப் படையும் புதுமதுப் பிலிற்றும்
தென்றல்வந்(து) உலவும் மன்றல்அம் காவும்
பொறிக்குலம் மிக்கும் வெறிக்குழல் மாதர்ப்
புல்லி விடா(து)உறங்(கு) அல்லி விரித்த
சேக்கையும்முதலாப் போக்கறு பெருவளம்
துற்ற கழற்கால் கொற்றவர் கோட்டியும்
ஒன்றும் சிந்தியாப் பொன்றும் பான்மையும்
உடுக்கக் கூறையும் படுக்கப் பாயலும்
இன்றி இரப்பில் சொன்றிஈ கிற்பரோ
அடர்கோல் தாக்கிப் பிடர்பிடித்(து) உந்தி
இன்னா செய்வரோ என்னா உழந்து
கச்சம் கடந்த அச்சம் தலைக்கொளீஇ
நோய்ப்பசி தீயில் தீய்ப்பத் தேம்பி
வயிறுவெந் ஒட்டி எயிறு காய்ந்து
மிச்சில் அருந்தும் கொச்சை மாக்களும்
துஞ்சும் ஆற்றலும் மஞ்சு பெயல்இயைய ?
உத்தமக் கவிபொழி வித்துவக் குழாங்களும்
இறக்கும் நீர்மையும் பிறக்கும் ஏனையபிற
மாக்களும் விலங்கும் வீக்களும் யாவையும்
கழிதலும் நிரம்ப விழிவழி நாளும்
கண்டும் கேட்டும் பண்டைநூல் தேர்ந்தும்
என்புதோல் போர்த்துப் புன்புலால் பம்பி
ஊற்(று)இருந்(து) இழிமல நாற்றம் மிகுந்து
பட்டதன் பின்னரும் சுட்டெரிக் கும்புகை
மூக்கைத் துளைக்கும்இவ் யாக்கைப் பீறலின்
பொள்ளற் குடங்கரில் பள்ளநீர் வதிந்த
பெற்றியை ஏய்ப்பப் பற்றிய உயிர்மரீ இ
இருத்தலை மறந்து கருத்(து)ஓ ராமே
ஊழிகாண் கிற்கும் வாழி உடம்பாத்
தலைதடு மாறி நிலைகெடு செல்வத்(து)
அறஇறு மாந்து மறவினை முற்றி
அயிறலும் பின்றைத் துயிறலும் கருமமாத்
தினைத்துணைப் போழ்தையும் நினைத்(து)உனைத் தொழுது
கள்ளம்ஓ டத்துரந்(து). உள்ளம்நெக்(கு) உருகி
விண்முகம் பராவும் சண்முகாம் புயமும்

தவா(து)அளி கொழிக்கும் துவாதச நயனமும்
பன்னிரு பானுவும் பொன்இரும் கிரித்தலை
ஒருங்குசூழ் விந்தையை மருங்கு தெரிக்கும்
வரைத்தோள் தைவரும் நிரைக்குழை வீக்கமும்
நுண்ணூல் அறிவினின் வெண்ணூல் மார்பமும்
சிலம்பும் சதங்கையும் புலம்புகிண் கிணியும்
தண்டையும் வாகையங் கண்டையும் சத்தித்(து)
அரணம் ஈத்(து)ஏற்கும் சரணச ராசமும்
சுமனசா சுகனும் சமரசம் கிடையாக்
கட்டழ(கு) இளமையும் பொட்(டு)அழ(கு)இழப்பத்
தொங்கல் கூழையும் மங்கல நாணியும்
புழுதியில் புரள இழுதையின் இழிந்த
ஆசுராங் கனையர் மூசுரத்(து) எற்றி
அழுகுரல் ஓதை எழுபொழில் தூர்ப்பப்
பருந்தும் சேனமும் விருந்(து)உணா உண்ணக்
காளியும் கழுதும் கூளியும் கூடிப்
பரவையும் அடங்கக் குரவைகோத்(து) ஆடக்
குண்டலம் அணுகிஆ கண்டலன் நறும்துணர்க்
கற்பக நீழலில் பற்பகல் களிப்பிய
பூதலப் பாரமும் ஈதலத்(து) இலேகர்
வலைக்(கு)அகப் படுத்துத் தலைக்கொணர் மீனச்
சும்மையும் தொலைத்து தம்முது(கு) ஆற்ற
ஒன்னார்க்(கு) எவ்விய மின்னார் கடவுள்
பத்திபாய்ந்(து) ஒழு(கு)ஒளிச் சத்தியும் அரையில்
கச்சையும் சுரிகையும் செச்சையும் இமையா
நோக்கி உரோமம் மேக்குப் பொடித்து
நாத்தழும் பேறத் தோத்திரம் பாடிப்
பரசுகோ ததியின் திரைசமீ ரணித்து ?
மூழ்கலை ஒருவிய பாழ்மனச் சழக்கனேற்(கு)
இப்பவம் போயபின் எப்பவம் எய்துமோ
காற்றுள காலையே தூற்றுமா கழறிய
ஆ(சு)அகல் மேலோர் வாசகப் படியே
தீமயக் கொடூர ஆமயங் கவற்றலின்
அங்கிய மழுங்கிய பொங்கிய பங்கியும்
துருத்திமா ருதம்பொரு விருத்திவெய் துயிர்ப்பும்
நீல்நிறச் சிந்துவில் பால்நிறப் பிறைஇரண்டு
இளங்கதிர் வீசலின் துளங்(கு)அதிர் கோடணை
உக்கிர உருவின் வக்கிர தந்தமும்
சபிரிபம் உகைக்கும்வெம் பயிரவக் கோலமும் ?
தண்டமும் பாசமும் கொண்டதிண் பரூஉவலித்
தென்திசைக் காதிபன் கொன்(று)அணுத் தீர்ந்துழித்
துத்தம்நொந்(து) உதவிய வித்தகத் தல்லியும்
பாதுகாத்(து) ஓம்பிய தாதையும் கொஞ்சிய
மைந்தரும் கடிமணப் பந்தரின் விதியுளிப்
பரிணயம் குயிற்றிய எரிஇழைத் தெரிவையும்
இளைஞரும் முதியரும் கிளைஞரும் யாவரும்
கட்டிஆ வலித்துமுக முட்டிமோ திக்கலுழ்ந்(து)
ஏங்கிமா ழாப்பப் பாங்குசிலர் எழீஇ
விலங்கலிர் தொடர்திரோ கலங்கலின் ஆம்கொலோ
சாதமும் பரிபவம் வீதலும் இயற்கையே
கொன்னே வருந்தலால் என்னே நெருங்கலுக்கு
அவத்தினை விளைக்கும்இச் சவத்தினை மண்ணுபு
ஆடையில் புனைந்து பாடையின் ஏற்றித்
தூக்குதிர் பாணியா(து) ஊக்குதிர் விரைவினின்
உண்ணலுக்(கு) ஆயின பண்ணலுக்(கு) என்பதன்
முன்னர்ச் சோபித நன்னர்ச் சிகாவளப்
பவனவே கத்தினும் கவனவாம் புரவியின்
விடர்உகா சரணையின் படர்களை ஒழீஇப்பரித்து
இச்சையின் இயங்கிய பச்சையம் பிறங்கலின்

நீட்சிமே ருவைத்தக நிமிர்ந்த
மாட்சிமை சான்ற காட்சிதந்(து) அருளே.
****

அடி 1- 13. " ஓர் உருள் .....மயில்மலை. "
குன்றக்குடி வளம்கூறுதல்.

குறிப்புரை : ஓர் உருள்= ஒற்றைச் சக்கரம். சயந்தனம்= சூரியன். வாய் மலர்கிற்பன= ஒளியால் மலர்வனவாகிய. ஆய்மலர்ப்பள்ளி= சிறந்த மலர்களாகிய இருப்பிடம். அறுகால் புள்குலம்= ஆறுகால்களுடைய வண்டினம். .உதைத்தல்= கிண்டுதல். பிணிஅவிழ் தளவம்= மலர்ந்த முல்லைமொட்டு. மென்அணிய= மென்மையாக அருகில் உள்ள. குடைபு= கிண்டி அளைஇ= துளாவி. கணக்கற= அளவின்றி. பிணக்கு அறுத்து= ஒற்றுமையாக. நபம் புகு உயர்கோடு= வானளாவிய உயரமான கிளைகளுடைய. பராரை= பருத்த அடி. தேமாங்குயிலினம்= மாஞ்சோலைக் குயில்கூட்டம். அவண்= அங்கு. பிழைப்பில= தவறாது. சுகப்பரி= கிளியாகிய குதிரை. ஞாங்கர்= அங்கு. மெல்லியல் கேகய கணிகையர்= மென்மையான இயல்புடைய மயில்போல் தாளம்கணித்து ஆடும்மகளிர். சதுர்= நாட்டியம். அரசாள்= ஆட்சிசெய்யும்.

பொழிப்புரை : ஒற்றைச்சக்கரமுடையவனும், இருளுக்குப் பகைவனும் ஆகிய சூரியனின் ஒளியால் மலர்வனவாகிய சிறந்த மலர்களாகிய தன்இருப்பிடத்தை, ஆறுகால்களுடைய வண்டினம் தமது சின்னஞ்சிறிய கால்களால் கிண்ட மொட்டவிழ்ந்த முல்லையுடன், அருகில் உள்ள மென்மையான பூக்களையும் கிண்டியும், சிறந்தபூந்தாதினைத் துளாவியும், புதுத்தேன் பருகியும், தெவிட்டியவற்றை அளவின்றி அடைகளில் தேக்கிவைக்கவும், வானளாவிய உயரமானகிளைகளுடைய பருத்த அடியினையுடைய மாஞ்சோலைக் குயில்கூட்டம் மன்மதனே வருக என்று அழைப்பனபோலத் தவறாது கூவவும், மென்மையான இயல்புடைய மயில்போன்ற மகளிர் நாட்டியமாடவும், கிளியாகிய குதிரைமேலேறி மகிழ்வுடன் மன்மதன்அங்குவந்து ஆட்சிசெய்யும் அழகிய சோலைகள் சூழ்ந்த மயில்மலையில்.

விளக்கம் : சூரியனின் தேர் ஒற்றைச்சக்கரமுடையது :

காலத்தால் முற்பட்ட தண்டியலங்காரம், வேற்றுமையணியின் ஒருபிரிவாகிய பொருள்வேற்றுமை அணிக்கு எடுத்துக்காட்டாகத்தரும் வெண்பா,

" ஓங்க லிடைவந்(து) உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருள்அகற்றும் - ஆங்கவற்றுள்
மின்ஏர் **தனிஆழி வெங்கதிர்** ஒன்(று)ஏனையது
தன்னேர் இலாத தமிழ்."

என்பதில்வரும் **தனிஆழி வெங்கதிர்** என்பது ஒற்றைச் சக்கரமுடைய சூரியனைக்குறிக்கும்.

மேலும், ஸ்ரீ குமரகுருபர அடிகள் அருளிய முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் சிறுபறைப் பருவத்து மூன்றாம் பாடலில்

வெயில்கதிர்ப் போர்வையான் **தனி ஆழி திசைஉருட்ட** என்பதும் நோக்குக.

குன்றக்குடியின் இன்பச்சூழலை; மலர்கள், வண்டு, குயில், கிளி,, மாதர், சோலை முதலியவற்றால் காட்டுகிறார். இவை முறையே மன்மதனின் அம்புகள், வில்நாண், எக்காளம், ஊர்தி, சேனை, பாசறை ஆகியவற்றைக் குறிப்பனவாகும்.

அடி 13 - 30. " மேவிய அயில்மலை ..... செவி ஏற்குதி. "
அருள்தரு சண்முகநாதப்பெருமான் புகழ்கூறி, வேண்டுதல்.

குறிப்புரை : மேவிய= எழுந்தருளியுள்ள. அயில்மலை= வேல் ஒத்த. விலோசனம்= சிறந்த கண்கள். கரிப்பிணா= தெய்வயானைஅம்மை. கடம்பணி= கடப்பமாலை சூடிய. தயாபர= கருணைவடிவான மேலானவனே. பைங்கண் செவிக் கலன்= படமுடன் கண்ணையே தனது காதுகளாகக்கொண்டதுமான பாம்பு அணிகலன். புராதனன்= அநாதியான சிவபிரான். பிரசாரணன= அறம் விரித்ததலைவனே- ஓங்காரப்பொருள் உபதேசித்தவனே. வெண்= தூய்மை. கண்ணிலான் மதலை= திருதிராட்டிரன் மகன் துரியோதனன். அந்தகன் பின்வரும்= குருடனாகிய திருதிராட்டிரன் தம்பி - பாண்டு. இந்திர சூநு= இந்திரன்மகன் அருச்சுனன். ஏறிய தேரியாத்து= அமர்ந்த தேரில் கட்டிய. துரகதம் நடாத்திய= தேர்க்குதிரைகளைச் செலுத்திய.. குரூக்கவின்= ஒளிஅழகு. யாதவ குலேசன்= ஆயர்குலக்கண்ணன். தாமோதரன்= கண்ணபிரான். ஆரணன்= பிரமதேவன். .தேறி= தெளிவாக அறிந்து. முன்= முதலில். கணீரென= ஒலிஎழ. செயா= செய்து. சிட்டித்தொழில்= படைக்கும் பணி. இயற்றி= தானே மேற்கொண்டு. பயிற்றிய= கற்றுக்கொடுத்த. தேசிக= குருவே. பேரருள் கோடல்= திருவருள் பெற. அல்லனேன்= தகுதியில்லாதஎனது. ஒல்லுமோ= வாய்க்குமோ. கெழுமிய= நிறைந்த. முறையிடு பாட்டு= என்குறைகூறி வேண்டும் பாடல். செவி நிறை ஏற்குதி= காதில் முழுமையாக ஏற்றருள்.

பொழிப்புரை : (மயில்மலையில்) எழுந்தருளி, வேல்போன்ற கண்களுடைய கருணை சிறந்த வள்ளிநாச்சியார், தெய்வயானை அம்மை ஆகிய இருவரையும் பொருந்தத் தழுவி,மகிழ்கிறவனும், கடம்பமாலை அணிந்த பன்னிருதோள்களுடையவனும் ஆகிய கருணையே வடிவான மேலானவனே! படத்துடன் தன்கண்களையே தனது செவிகளாகக் கொண்டதும் ஆகிய நாகத்தை அணிகலனாகக் கொண்டவனும் மூன்றுகண்கள் உடையவனும் அநாதியனுமாகிய சிவபிரானுக்கு, சிறந்த பிரணவப்

பொருளை விரிவாக உபதேசித்த தலைவனே! தூய்மை இல்லாதவனும் வஞ்சகமுடையவனும் ஆகிய குருடனாம் திருதிராட்டிரன் மகனாகிய துரியோதனனுக்குப் படைஉதவி செய்தும், திருதிராட்டிரன் தம்பிபாண்டுவின் மகனும் இந்திரன்புதல்வனுமாகிய விசயன் ஏறிய தேரோட்டியாகிக் குதிரைகளைச் செலுத்தியவனும் மரகதமணியின் ஒளிபோன்ற ஒளியுடைய அழகினனும் ஆகிய ஆயர்குலத்துக் கண்ணபிரானுக்கு மருமகனே! முற்காலத்தில் வேதம்ஓதும் பிரமதேவன் செருக்குக்கொண்ட காரணத்தை நன்குஅறிந்து. அவனது சிரங்களில் ஒலிஎழத் தன்கரங்களால் குட்டிச் சிறையிலிட்டுத் தானே படைப்புத்தொழிலைச் செய்ததுடன், பிரணவப்பொருளை உபதேசித்த குருவே! நாயினும் கீழ்ப்பட்டவன் நான். எனினும், உனது மிகச்சிறந்த அருளைப்பெறத் தகுதிஇல்லாத என்பாடலுக்கு அதுபொருந்துமோ! எனவே மிகநிறைந்த அன்புடன் அற்பனாகிய நான் என்குறையினைக் கூறி வேண்டுகிற என்பாடலை உன்திருச்செவிகளில் முழுமையாகக் கேட்டருள்க.

விளக்கம் : முருகனிடம் உபதேசம் பெற்றபோது சிவபிரானின் பணிவானநிலை:

" சீயனம் போதிஎன வாய்புதைத்துச் செவிதர " கந்தர் அந். 19.

" சரணமென வந்தவர்க்கு ஆதாரமானஇரு சரணமும் கூப்பிவேழச்
சருமமும் உடுத்திவெம் புலிஅதள் உடுத்திமுன் தானையும் ஒடுக்கிநாகா
பரணமும் தாழுதுஎடுத்துச் சுருட்டிஇரு பங்கயக் கைகள்கட்டிப்
பரிவர்த்த னைக்கால மாமென மான்மழுப் பக்கத்துஇ லங்கமூன்றாம்
கிரணவெண் பிறையும் கடுக்கையும் முழங்குபா கீரதியும் வீழ்வதுஎன்னக்
கிளர்தலை குனிந்துஜந்து வாயும்பு தைத்தமா கேசன்தி ருச்செவிக்குள்
திரணம்என அமுதுஎழும் பிரணவத்தின் உரைசொன்ன திருவாயின் முத்தம்அருளே
செங்கண்மால் மருகனே குன்றைவாழ் முருகனே திருவாயின் முத்தம்அருளே. "
- குன்றக்குடி அருள்தரு சண்முகநாதன் பிள்ளைத்தமிழ். முத்தப்.2.

பிரமனைக் குட்டியதும் சிறையிட்டதும் :

" கரமொன்று பொன்வளை கலீரென்ன மாறாது கங்கணத்து ஒலிபுலம்பக்
காந்தள்அம் போதெனக் கரதலம் சேப்பநற் கணயாழி விரல்அழுந்தச்
சிரமும்ச டாடவியும் அசையவெண் நிலவோடு தெண்ணிலவு மூரல்காட்டிச்
சிவனும்ச பாசென்ன உமையவள் சரோருகச் சித்தம்க ளிக்கவேதன்
உரமும்தி டுக்கென்ன வாணிநெஞ்சு அஞ்சவான் உம்பர்கோன் ஊழிகாலத்து
உரும்ஏறு இதாமென்ன விண்ணவர் நடுங்கவே ஒருதரத்து ஈரிரண்டு
தரமும்க ணீரிடக் குட்டுமொரு செங்கையால் சப்பாணி கொட்டிஅருளே
தங்கமலை நிகரான துங்கமலை ஆதிபதி சப்பாணி கொட்டிஅருளே.
- குன்றக்குடி அருள்தரு சண்முகநாதன் பிள்ளைத்தமிழ். சப்பாணி. 5.

" சிட்டித் தொழில்அதனைச் செய்வதுஎங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறை இருத்தும் கோமானே " - கந்தர் கலிவெண்பா. கண்ணி. 92.

இலக்கணக்குறிப்பு : மலை - உவமஉருபு. தழீஇ - இன்னிசை அளபெடை.

அடி 31 -47. " தந்தைமாதா ..... யூகிப்பில்."

பிறந்து என்ஊழ்வினையைக் கழுவாது மேலும் வினையைக் கூட்டிக்கொண்டேன்.

குறிப்புரை : முந்தை மாக்குரவர்= என்முன்னோராகிய சிறந்த பெற்றோர். புறப்பு உறப் படும்=வெளிவரும். சுக்கிலம் சுரோணிதம்= விந்து, கருமுட்டை. தொக்கபோது= ஒன்றுகூடியபோது. நினைவு அழி புலைஞன்= முன்னைய - சென்றபிறப்பின் நினைவுகள் அழிந்த கீழ்மகன். பிறப்பினை= பிறப்பினால்.அறல்=அறல்மணல். உறழ்= ஒத்த. காமரு= விரும்பத்தக்க. நாள் கமல மரை=அன்றுமலர்ந்த தாமரைமலர். விமலம்= அழகு. வாள்- ஒளி. கடல்= பெரிய. நிகர்பட= ஒத்த. வார்= முலைக்கச்சு. கடுக்கை= கொன்றைமலர். உடுக்கை=ஆடை - வெட்டவெளி. பொற்றொடி= பொன்னாலான வளையல். பூ= மென்மை. ஏமாந்து= மிக்க களிப்புற்று. ஆட்படுவது= அடிமைப்படுவது. ஆம்பல்போது= ஆம்பல்மலர். தேம்= தேன். மாற்றம்= சொல். உணர்ச்சியோர்= நல்லுணர்வினர். வெ.ஃகா= விரும்பாத. ஏக்கற்று= ஆசையால் தாழ்ந்து. வாளா= பயனற்ற. விரகம்= காமம். யூகிற்பின்= சிந்தித்தால்.

பொழிப்புரை : என்முன்னோராம் தந்தை தாய் ஆகிய சிறந்த பெற்றோர் இருவரும் அன்புடன் கூடியதால் அவர்களிடம் வெளிப்பட்ட விந்து, கருமுட்டை ஆகியன ஒன்றுகூடியஅப்போது, அதன்வழியே என்முன்னை வினைப்பயனின்வண்ணம் என்முன்னைப்பிறப்பின் நினைவு அழிந்துதோன்றிய கீழானநான்; முன்பு மிக்கதவம் செய்திருந்ததால் அ.ஃறிணையாகப் பிறக்காது, பெறுதற்கரிய மனிதப்பிறப்புப் பெற்று, அறல்மணல் போன்ற கரிய கூந்தலும், எமன்போல் கொடியபார்வையுடைய காதளவு கண்ணும், அன்றலர்ந்த விரும்பத்தக்க புதுத்தாமரைமலர் போன்ற அழகும் ஒளியும் ஒருசேரப்பெற்ற முகஅழகும், கச்சணிந்த பெரிய குமிழியை ஒத்தது என்று கூறத்தக்க முலையும், கொன்றைமாலை சூடிய சிவபிரானின் திசையாடை போன்றுள்ள மிகமிக நுண்ணிய சிற்றிடையும், பொன்வளையலும் பெற்ற பெண்களின் மென்மையான பாதத்தை ஆசையால் தாழ்ந்துபணிந்து அவர்கட்குஅடிமைப்படும்பொருட்டு, அவர்களின் ஆம்பல்மலர் பொழிந்ததேன் ஒத்த சொற்களைக் கேட்க வருந்தும் மனத்துடன், நல்லுணர்வு உடையவர் விரும்பாத புணர்ச்சிக்கு ஆசையால் தாழ்ந்து, பயனற்ற காமம்காரணமாக மீளாத நரகத்தில் விழுந்து அழிவது பற்றி ஆழமாகச் சிந்தித்தால்.

விளக்கம் : சிவபிரானுக்குத் திசைஆடை என்பது ஆடையில்லா நிலைகுறிப்பது. பெண்ணுக்கு இது " இல்லையோ உண்டோஇடை " என்று எண்ணுமாறு இருப்பதைக் குறிப்பது. பொதுவாக ஆண்பெண் இருபாலார்க்கும் இடைசிறுத்துஇருப்பதே உடல்நலநிலை என்பது மருத்துவ அறிவியல்

இலக்கணக்குறிப்பு : தாதா மாதா - உம்மைத்தொகை. சுக்கில சுரோணிதம் - உம்மைத்தொகை. அறல் கருங்கூந்தல் - உவமைத்தொகை. உறழ், புரை, நிகர், என்ன - உவமஉருபுகள். வெகா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

அடி 48 - 64. " கழுவலுக்கு ..... பொன்றும் பான்மையும். "

இம்மை மறுமைபற்றிச் சிந்திக்காத மாபெரும் செல்வவாழ்வில் அழிதல்.

குறிப்புரை : மகன்= ஆண்மகன் ஒருவன். கழுவலுக்கு= கழுவிக்கொள்வதற்கு.. கால்கவர்= கால்கள் புதையும். ஆற்றைக்கடுப்ப= முறையினை ஒப்ப. அம்மை= மறுபிறப்பு. தபுத்து= கைவிட்டு. கந்தரம்கடவும்= மேகத்தைத் தனது ஊர்தியாகச்செலுத்துகிற. புரைசைக் கரி= கழுத்தில்கயிறு கட்டிய யானை. அரைசர்= அரசர்கள். அவனி= உலகம். பொதுவற= பிறர்க்கும் உரியதென்று கூறாதபடி. பவனி= உலா. ஆண்தகை= ஆண்களுள். மிகச்சிறந்தவீரனாக. அளித்து= காத்து. கொற்றக் கவிகை= வெண்கொற்றக் குடை. சிவிகை= பல்லக்கு. அப்பிய= பதித்த. திப்பிய சதனம்= சிறந்த வீடு - அரண்மனை. சதுர்வித= நால்வகை. பிலிற்றும்= சுரக்கும். மன்றல்= மணம். பொறிக்குலம்= வண்டினம். வெறிக்குழல்= மணக்கும் கூந்தல். விடாது புல்லி= கைநெகிழாது தழுவி. அல்லி= பூந்தாது. சேக்கை= படுக்கை. போக்கறு= குறையாது. கழல் துற்ற கால்= வீரக்கழல் கட்டிய கால். கொற்றவர்க் கோட்டி= அரசர் கூட்டம். ஒன்றும் சிந்தியா= எந்தஒன்றையும் நினையாத. பொன்றும் பான்மை= அழியும் தன்மை.

பொழிப்புரை : ஆண்மகன் ஒருவன் முழுமையாகக் கழுவிக்கொள்வதற்கு ஆகாத கால்புதையும் சேற்றுநீரை உடலெங்கும் பூசிக்கொண்டதுபோல, இம்மை மறுமைகளில் வினைப்பயனைத் தீர்த்துக்கொள்ள உரிய சிறந்தவழிகளைக் கைவிட்டு; மேகத்தைத் தனது ஊர்தியாகசெலுத்தும் இந்திரனை ஒப்ப, கழுத்தில் கயிறுகட்டிய யானையின்மேல்ஏறி, அரசர்கள்போற்ற உலாவந்து, இவ்வுலகம் பிறர்க்கும் உரியதன்று தனக்கே உரியது என்று கூறுமாறு ஆண்களுள் மிகச்சிறந்த வீரனாகப் பலஆண்டுகள் உலகைக்காத்து, வெண்கொற்றக் குடையும் பல்லக்கும் ஒளிரும் மணிகள் பதித்த வானளாவும் உயரமான சிறந்தவிடாகிய - அரண்மனையில், யானை குதிரை தேர் காலாள் ஆகிய நால்வகைப்படையுடன், அன்றாடம் தேன்சுரப்பதும் தென்றல்வந்து வீசுவதும்ஆகிய மணமுடைய சோலையில், புள்ளிகளுடைய வண்டுகள் மிகுதியாக மொய்க்கும் மணமலர் சூடிய கூந்தலுடைய மகளிரைக் கைநெகிழாமல் தழுவி உறங்கும் பூந்தாதுபரப்பிய படுக்கையும் முதலியனகொண்ட குறைவற்ற செல்வமும், வீரக்கழல் கட்டிய கால்களுடைய அரசர் கூட்டமும் ஆகிய அழியும் தன்மையுடைய எந்தஒன்றயும் நினைத்து மனம்அழியும் தன்மையும்.

இலக்கணக்குறிப்பு : இம்மையும் அம்மையும் - எண்ணும்மைகள். செம்மை - பண்பாகுபெயர். அரைசர் - இடைப்போலி. கவிகையும் சிவிகையும் சதனமும் படையும் காவும் சேக்கையும் கோட்டியும் - எண்ணும்மைகள். சதுர்விதப் படை - தொகைக்குறிப்பு. சிந்தியா - செய்யாஎன்னும் வாய்பாட்டுவினைஎச்சம்.

அடி. 64 - 77. " உடுக்கக் கூறையின்றியும் ..... நூல்தேர்ந்தும்."

வறியவர், அறிஞர், அ.்றிணை உயிர்கள் முதலிய அனைத்தும் தொன்றுதொட்டு இறத்தலைக் கண்டும்கேட்டும் நூல்களில் படித்து அறிந்தும்.

குறிப்புரை : கூறை= ஆடை. பாயல்= பாய். இரப்பில்= யாசிக்கச் சென்றால். சொன்றி ஈகிற்பர்= உணவினை இடுவோர். அடர்கோல்= திரண்ட - வலிமையான குச்சி. உந்தி= தள்ளி. உழந்து= வருந்தி. கச்சம் கடந்த= அளவற்ற. தலைக்கொளீஇ= மிகுந்து. நோய்ப் பசித்தீ= நோயாகியபசி என்னும்தீ. தீய்ப்ப= எரிக்க. வெந்= முதுகு. எயிறு காய்ந்து= வாய்புலர்ந்து. மிச்சில்= பிறருண்டு எஞ்சிய எச்சில்உணவு. கொச்சை= கீழ். துஞ்சும் ஆற்றல்= இறக்கும் இயற்கை. மஞ்சு பெயல் இயைய= மேகம் பொழியும் மழைபோல. வித்துவக்குழாம்= அறிஞர்கூட்டம். நீர்மையும்= இயல்பையும். மாக்கள்= மக்கள். வீக்களும்= பறவைகளும். கழிதல்= இறத்தல். வழிவழி= காலம்காலமாக. தேர்ந்தும்= தெளிவாக அறிந்தும்.

பொழிப்புரை : உடுத்த ஆடையும், படுத்துறங்கப் பாயும், இல்லாமல், உணவிடும்பிறரிடம் யாசித்தால் உணவுதருவரோ ? திரண்ட குச்சியைக்கையில் எடுத்துஅடித்துப் பிடரினைப் பிடித்துத்தள்ளித் துன்பம்செய்வரோ ? என்று துன்பத்துடன்எண்ணி, அளவற்ற அச்சம்மிகுந்து, நோயாகிய பசிஎன்னும் தீஎரிக்க வருந்தி, வயிறு முதுகைஒட்ட வாய்புலர்ந்து, பிறருண்டு எறிந்த எச்சிலுணவை உண்ணும் கீழ்மக்களும், மேகத்தின் பெருமழைபோல் மிகச்சிறந்த கவிதைகளைப்பொழியும் அறிஞர்கூட்டமும் இறந்தும்போகும் இயற்கையையும்; விளங்கும் ஏனைய மக்கள், விலங்கு, பறவைகள் முதலிய அனைத்தும் காலங்காலமாக இறப்பதையும் கண்டும்கேட்டும் பழைமையான நூல்களில் படித்தும்;

இலக்கணக்குறிப்பு : கூறையும் பாயலும் - எண்ணும்மைகள். ஈகிற்பரோ செய்வரோ -ஓகாரங்கள் ஐயம்குறிப்பன. தலைக்கொளீஇ - இன்னிசை அளபெடை (மிகமிக மிகுந்ததைக்குறித்தது). மாக்களும், வித்துவக் குழாங்களும், மாக்களும் விலங்கும் வீக்களும் - எண்ணும்மைகள். வழிவழி - இரட்டைக்கிளவி. கண்டும், கேட்டும், தேர்ந்தும் - எண்ணும்மைகள்.

அடி 78 - 89. " என்புதோல் ..... நினைத்து உனை "

கீழான உடம்பைவளர்த்து, தினையளவாவது உன்னை நினைத்து.

குறிப்புரை : புன்புலால்=அற்பத்தசை. பம்பி= பருத்து. ஊற்று இருந்து இழி= நீரூற்றுப்போல் வெளிப்படும். மலநாற்றம்= சிறுநீர் பவ்வீ வியர்வை ஆகியவற்றின் நாற்றம். பட்டதன்பின்னரும்= இறந்தபிறகும். பீறல்= இழிந்தது. பொள்ளல்= துளைகள். குடங்கர்= வீடு. பள்ளநீர் வதிந்த பெற்றி= சிறு பள்ளத்தில் நீர்தங்கியுள்ள தன்மை. உயிர்மரீஇ = உயிர்பொருந்தி. கருத்து ஓராமே= பிறப்பின் காரணத்தைச் சிந்திக்காமல். ஊழிகாண்கிற்கும்= ஊழிக்கால அளவுநிலைத்து நின்று. வாழி= வாழும் தலைதடுமாறி= மயங்கிநினைத்து, நிலைகெடு= தன்னிருப்பில் கெடும். அற இறுமாந்து= முற்றிலும் செருக்குக்கொண்டு. மறவினை= பாவச்செயல். முற்றி= மேன்மேல் செய்து. அயிறல்= உண்ணல். கருமமா= செய்யத்தக்க செயலாக. தினைத்துணைப் போழ்து = தினைஅளவு - மிகச்சிறு நேரம்.

பொழிப்புரை : எலும்பைத் தோலால் போர்த்து, அற்பமான சதைபருத்து, நீரூற்றுப்போல் வெளிப்படும் வியர்வை சிறுநீர் மலம் முதலிய அழுக்குகளின் நாற்றம் மிகுந்து, இறந்தபின்னும் அப்பிணத்தைச் சுட்டுஎரிக்கும் புகையின் நாற்றம் மூக்கைதுளைக்கின்ற இழிந்த இவ்வுடம்பில், வியர்வைத்துளை முதலிய எண்ணற்ற துளைகளுடைய உடம்பாகிய இவ்அற்பவீட்டில், சிறுபள்ளத்தில் தங்கியுள்ள சிறிதளவு நீர்போல் தங்கியுள்ள உயிரின் தன்மையை நினைக்காதுமறந்து, ஊழிக்கால அளவு நிலைத்துநின்று வாழ்தலையுடைய உடம்பாக இதைமயங்கிநினைந்து, நிலையற்ற செல்வத்தால் முழுச்செருக்குற்று, பாவங்கள் அளவின்றிச்செய்து, நாடோறும் உண்ணல் உறங்கல் ஆகிய னவே செய்யவேண்டிய செயல்களாகச்செய்து, தினையளவு காலமும்கூட உன்னைஎண்ணிப்பார்த்து.

விளக்கம் : நீரூற்றுப்போல் என்ற உவமை, நேரம்காலம் என்ற வரையறையின்றி வியர்வை சிறுநீர் மலம் ஆகியன இடையறாது வெளிப்படுதல் குறித்தது. மூக்கு 2,காது 2,கண் 2, வாய் 1, எருவாய் 1, கருவாய் 1 ஆக ஒன்பான் துளைகளுடன் வியர்வைத்துளைகள் எண்ணற்றன ஆதலின் பொள்ளற் குடங்கர் என்றார், சிறுபள்ளத்தில் தங்கியசிறிதளவு நீர் விரைவில் ஆவியாகி மறைவதுபோன்றது துச்சில் இருக்கும் உயிர் என்றார். ஆறுஇடும் மேடும் மடுவும்போல் ஆம் செல்வம் ஆதலின் தன்நிலைகெடு செல்வம் என்றார்.

இலக்கணக்குறிப்பு : ஊற்று இருந்து இழிமலம் - எடுத்துக்காட்டு உவமையணி. பள்ளநீர் வதிந்த பெற்றியை ஏய்ப்பப் பற்றிய உயிர் - உவமையணி. பொள்ளற் குடங்கர் - உருவகம். வாழி - இகரஈற்றுத் தொழிற்பெயர். நிலை கெடுசெல்வம் - வினைத்தொகை. அயிறலும் துயிறலும் - எண்ணும்மைகள்.

அடி 89 - 101. " உனைத் தொழுது - இளமையும். "
என்வஞ்சனைகளை ஓட்டி .....கட்டழகு இளமையும்.

குறிப்புரை : துரந்து= ஓட்டி. - விரட்டி. நெக்கு உருகி= இளகி உருகி. விண்முகம்= வானுலகத் தேவர்கள். சண்முக அம்புயம்= ஆறுமுகங்களாகிய தாமரைகள். தவாது= சிறிதும் குறைவின்றி. அளிகொழிக்கும்= கருணை பொழியும். துவாதச நயனம்= பன்னிரு திருக்கண்கள். பொன்இரும் கிரித்தலை பன்னிருபாநுவும் ஒருங்குசூழ் விந்தையைமருங்கு தெரிக்கும் வரைத்தோள் தைவரு நிரைக்குழை வீக்கம் " என்றுகூட்டுக. பொன் இரும்கிரித்தலை= அழகிய பெரிய மேருமலைக்கண். பன்னிரு பாநு= பன்னிரண்டு சூரியன்கள். ஒருங்கு சூழ்விந்தையை= ஒருசேரச் சூழ்ந்திருக்கும். விந்தை= அழகு. தெரிக்கும்= தெரிவிக்கும். வரைத்தோள்= மலைஒத்த தோள்கள்.தைவரு= தடவும். நிரைக்குழை வீக்கம்= வரிசையாக அமைந்த காதணிகளின் பெருமை. நுண்நூல் அறிவின்= நுட்பமான நூல்களில் விளங்கும் அறிவுபோன்ற. வெண்ணூல்= தூய - வெண்மையான பூணூல். அரணம்= பாதுகாப்பு. சுமனம்= நன்மனம். சாசுகன்= மன்மதன். கட்டழகு= பேரழகு.

பொழிப்புரை : என்வஞ்சனையான எண்ணங்களை விரட்டி, இளகி உருகி, வானுலகத் தேவர்கள் போற்றும் மலர்ந்த தாமரைமலர்கள் ஆகிய ஆறுதிருமுகங்களும், சிறிதும்குறைவிவின் அருள்கொழித்து வழங்கும் பன்னிருதிருக்கண்களும், அழகிய பெரியமேருமலை போன்ற பன்னிருதோள்களையும் ஒருசேரச் சூழ்ந்து தோள்களின் அழகைத்தெரிவிக்கும் பன்னிரண்டு சூரியர்கள்போல் பன்னிருதோள்களாகிய மலைகளைச் சூழ்ந்து அத்தோள்களைத்தடவும் வரிசையான காதணிகளின் பெருமையும், நுட்பமான நூல்களில் விளங்கும் தூயகருத்தினைப்போல் தூயவெண்மையான பூணூல் அணிந்த திருமார்பும், ஒலிக்கும்சிலம்பும் சதங்கையும் கிண்கிணியும் மற்றும் தண்டையும், வெற்றிபொருந்திய வீரக்கழலும் ஒலிஎழுப்பி, அண்டம்எங்கும் உள்ள நிலைத்திணை இயங்குதிணை ஆகிய எவ்வுயிர்க்கும் பாதுகாப்புப் பொறுப்பேற்று அதனைவழங்கும் திருவடியும், பேரழகுடைய மன்மதனும் ஒப்புமையாகாத பேரழகும் இளமையும் உடையவனே!

விளக்கம் : சித்திரைமுதல் பங்குனிஈறான மாதங்களுக்குச் சூரியர் முறையே; சாத்துரு, சக்கரன், அரி, இயமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், பூடன், சவித்ரு, துவட்டன் என்பர்

இலக்கணக்குறிப்பு : விண்முகம் - இடவாகுபெயர். சண்முக அம்புயம் - உருவகம். துவா தச= எண்ணும்மைத்தொகை. பன்னிரு பானுவும்= தொகைக்குறிப்பும், முற்றும்மையும் ஆம். வரைத்தோள்= உவமைத் தொகை. அறிவின்= இன் - உவமையுருபு. வெண்ணூல் - பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

அடி 101 - 108. " பொட்டழகு இழப்ப .....குரவைகோத்து ஆட "
என்இறப்பும் என்பிணம் தின்னக்கழுகும் கூளியும் குரவையாடி மகிழ்தலும்

குறிப்புரை : பொட்டழகு இழப்ப= மனைவி பொட்டிட்டுக் கொள்வதால் வரும் அழகை இழக்கவும், தொங்கல் கூழை= நீண்டு தொங்கும் அவள்கூந்தல். இழுதையின்= அறிவற்றவள்போல். ஆசுராங்கனையர்= ஆசுரமணம்புரிந்துகொண்டமகளிர். மூசு உரத்து எற்றி= மொய்த்துத் தம்மார்பில் அடித்துக்கொண்டு. ஓதை= ஒலி. எழுபொழில் தூர்ப்ப= ஏழு உலகங்களையும் மூட. சேனம்= கழுகு. உணா= உணவு. கழுது= பேய். கூளி= பெரும் பேய். பரவையும் அடங்க= கடலொலி சிறிதாக, குரவை கோத்து ஆட= கைகோத்துக் குரவையாட.

பொழிப்புரை : என்இறப்பினால் என்மனைவி பொட்டிட்டுக்கொள்வதால் வரும் அழகினை இழக்கவும், அறிவற்றவள்போல் அவள் கீழேவிழுந்து புரண்டதால் நீண்டுதொங்கும் அவளது கூந்தலும் கழுத்தில் இருக்கும் மங்கலநாணும் புழுதியில் புரளவும், ஆசுரமணம் புரிந்துகொண்ட மகளிர் கூடித்தமது மார்பில் அடித்துக்கொளவும், இவர்கள் அழும் குரல்ஒலி ஏழுஉலகங்களையும் மூட, பருந்துகளும், கழுகுகளும், காளியின் சிறுபேய்களும் பெரும்பேய்களும் கூடி, பிணமாகிய விருந்து கிடைத்தது என்று கடலொலியும் சிறிதுபடக் கைகோத்துக்கொண்டு குரவைக்கூத்தாட,

விளக்கம் : நீண்டுதொங்கும் கூந்தலைத் தொங்கல் கூந்தல் என்றார். வடவர் கூறும் எண்வகை மணங்களுள் ஆசுரரம் என்பதொன்று. ஆசுரமாவது, பெண்ணிற்குப் பொன்னணிகள் சூட்டி, அவளின் சுற்றத்தாருக்கும் வேண்டுவன கொடுத்து அப்பெண்ணை மணந்துகொள்வது. இதனொருகூறு இன்று பரிசம் என்றுவழங்கப்பெறுகிறது.

இலக்கணக்குறிப்பு : அழுகுரல் ஓதை எழுபொழில் தூர்ப்ப - உயர்வுநவிற்சியணி. பருந்தும் சேனமும் ; கழுதும் கூளியும் - எண்ணும்மைகள். பரவையும் அடங்க - உயர்வுநவிற்சியணி.

அடி 109 - 123. " குண்டலம் ..... வாசகப்படியே "

" வான்ஆளும் தேவேந்திரனும் தேவர்களும் பத்திமையுடன் வணங்கும் முருகனாகிய உன்னை வணங்காத எனக்கு எப்பிறவி வாய்க்குமோ "

குறிப்புரை : குண்டலம்= வானுலகம். அணுகி= பொருந்திய.ஆகண்டலன்= தேவேந்திரன். நறுந்துணர்= மணக்கும் பூங்கொத்து. நீழல்= நிழல். களிப்பிய= களிப்புடன் வாழ்ந்த. பூதலப்பாரம்= வானுலகாளல். ஈ தலம்= இந்தவுலகம். இலேகர்= தேவர்கள். வலைக்கு அகப்படுத்து= வலை வீசிப்பிடித்து. தலைக்கொணர் சும்மை= தலையில் சுமந்துவந்த மீன்சுமை. தீர்ந்து= ஒழிந்து. தம்முதுகு ஆற்ற= தமது மிக்க வலிமையுடன் செய்தருள.. ஒன்னார்க்கு எவ்விய= பகைவர்மேல் செலுத்திய. பத்தி= முறை. ஒளிஒழுகு= ஒளிரும். சத்தி= கைவேல். கச்சை= இடுப்பில் கட்டும்வார். சுரிகை= உடைவாள். செச்சை= நீறு. இமையாநோக்கி= கண்ணிமைக்காமல் ஆர்வத்துடன் பார்த்து. மேக்கு= மேல்நோக்கி. பொடித்து= சிலிர்த்து. பரசு கோ ததி= போற்றத்தக்க மிகச்சிறந்த பசுவின் தயிர். திரை= கடல். சமீரணித்து= திருமுழுக்காட்டி. மூழ்கலை= திளைத்தலை. ஒருவிய= கைவிட்ட. சழக்கன்= தீயவன். இப்பவம்= இப்பிறப்பு.

பொழிப்புரை : வானுலகில் பொருந்திய தேவேந்திரனுக்கு, மணக்கும் பூங்கொத்துகளுடைய கற்பகமரநிழலில் பற்பலஆண்டுகள் களிப்புடன் வாழ்ந்த வானுலகாட்சியை வழங்கியதுடன், இவ்வுலகில் தேவர்கள் வலைவீசிப் பிடித்த மீன்சுமையைத் தம்தலையில் சுமந்துவந்து அசுரர்களுக்குக் கொடுத்த கொடுமையையும் உன்வலிமையால் தீர்த்தருள, நீ பகைவர்மேல் முறைப்படிச் செலுத்திய ஒளிரும் உன்கைவேல், வார்கட்டிய இடுப்பில்செருகிய உடைவாள், மேனியில் பூசிய திருநீறுமுதலியன கண்டு, மெய்ம்மயிர் பொடிப்ப, நாத்தழும்பேறத் துதித்துப்பாடி, போற்றத்தக்க மிகச்சிறந்த பசுவின் தயிரால் திருமுழுக்காட்டும் செயலைக் கைவிட்ட பாழான மனமுடைய தீயவனாகிய எனக்கு, இந்த மனிதப்பிறவிக்குப்பின் - இறப்பிற்குப்பின்- எவ்வகைப்பிறவி வாய்க்குமோ அறியேன்.

விளக்கம் : தயிர்த் திருமுழுக்காட்டு மட்டும் கூறினாராயினும் 32 உத்திகளுள் ஒன்றான "ஒன்றின முடித்தல் தன்இனம் முடித்தல்" என்னும் உத்தியால், பிறவாகிய பால், பஞ்சாமிர்தம், தேன் முதலியனவும் கொள்க." இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏதுவாகுமோ " என்றஆன்றோர் மொழி இங்கு எடுத்தாளப்பெற்றுள்ளது.

இலக்கணக்குறிப்பு : அண்மைச்சுட்டாகிய இகரம், முதல் நீண்டு ஈதலம் ஆனது..

அடி 122 - 147. " காற்றுள போதே .....அணுத்தீர்ந்துழி ".

" கொடியஎன் நோய் காரணமாக எமன் என்உயிரை உடம்பிலிருந்து பிரித்தபின் "

குறிப்புரை : காற்று= உயிர். தூற்றுமா= பழிக்கத்தக்கவற்றை வெளியேற்றிக் கொள்ளுமாறு. ஆசுஅகல்= குற்றமற்ற. தீமயம்= தீமையே வடிவான. ஆமயம்= நோய். வருத்தல்= துன்புறுத்தல். அங்கிய= நெருப்புப் போல் சிவந்த. மழுங்கிய= சுருண்ட. பொங்கிய பங்கி= மிகஅடர்ந்த தலைமுடி. துருத்தி மாருதம்= துருத்தி வெளியேற்றும் காற்று. பொரு= ஒத்த. விருத்தி வெய்துயிர்ப்பு= வெப்பமான பெருமூச்சு. நீல்நிறம்= கருநிறம். சிந்து= யானை. பால்நிறப் பிறை= வெண்ணிறப் பிறைநிலா. இளங்கதிர்= மென்மையான ஒளி. துளங்கு= அச்சமூட்டும். அதிர்= அதிர்ச்சி. கோடணை= பெருமுழக்கம் செய்யும். உக்கிர உரு= கொடிய வடிவம். வக்கிர தந்தம்= வளைந்த பல். சபிரியம்= எருமைக்கடா. உகைக்கும்= ஏறிச்செலுத்தும். வெம்பயிரவக் கோலம்= கொடிய அச்சம்தரும் உருவம். தண்டமும் பாசமும்= வலிமையான கோலும் பாசக்கயிறும். பரூஉவலி= மிகப்பேராற்றல். தென்திசைக்காதிபன்= தென்திசைக்குரிய எமன். அணுத்தீர்ந்துழி= உயிர்போனபிறகு.

பொழிப்புரை : உயிருள்ளபோதே பழிக்கத்தக்கவற்றை வெளியேற்றிக்கொள்ளுமாறு, குற்றமற்ற மேலோர் கூறியபடி நடக்காமையால்; தீமையே வடிவமான கொடியநோய் துன்புறுத்துவதால், என்னிடம் நெருப்புப்போல் சிவந்ததும், சுருண்டதும் ஆகியதலைமுடியும்; துருத்திவெளியேற்றும் காற்றுப்போல் வெப்பம்மிக்கபெருமூச்சும், கரியநிறமுடைய யானைபோல் பெரிய உருவில் இளஒளிவீசும் வெண்மையான பிறைபோல் வளைந்த பற்களுடன், அதிர்ச்சிதந்து அச்சமூட்டும் முழக்கமுடன், கொடிய உருவத்துடன் எருமைக்கடாவில் ஏறி அதனைச்செலுத்தும் பயங்கரவடிவமும், உறுதியான கோலும் உயிரினைக் கட்டிச்செல்ல உதவும் கயிறும் கொண்டு, மிக்கவலிமையுடன் தென்திசை ஆளும்எமன் உயிரை உடம்பிலிருந்து பிரித்தபோது,

விளக்கம் : " காற்று உளபோதே தூற்றிக்கொள் " என்பது காற்றடிக்கும்போதே பதர், கருக்காய் முதலியவற்றை நெல்லிலிருந்து பிரியும்வகையில் தூற்றிக்கொள் என்றபொருள் தருவதுடன்; உயிருடன் வாழும்போதே தீயபண்புகளை வெளியேற்றிக்கொள், இன்றேல் அத்தீயபண்பு அடுத்தபிறப்பிலும் தொடரும் என்ற பொருளும் தருவது. இதுஇங்கு தீயபண்புகளை வெளியேற்றுக என்றபொருளில் வந்துள்ளது. எமன் உருவம் கண்டார் இல்லையாயினும் அதுபற்றிக்கூறும் உலகியல் மரபில்கூறியுள்ளார்என்று கொள்க.

அடி 133 - 147 " துத்தம் ..... முன்னர் "

" உறவினர் ஒருவரை ஒருவர்கட்டிக்கொண்டு அழும்போது, வருந்திப்பயனில்லை, பிணத்தைத் தூக்குங்கள், பசிக்குச் சமைக்கவேண்டாமா? என்னுமுன் "

குறிப்புரை: துத்தம்= வயிறு. வித்தகம்= பெருமை. தல்லி= தாய். மைந்தர்= மனிதர். கடிமணப்பந்தர்= திருமணப்பந்தல். பரிணயம் குயிற்றிய= மணந்துகொண்ட. எரி இழைத்தெரிவை= ஒளிரும் அணிகலன் அணிந்த மனைவி. ஆவலித்து= வருந்தி. முட்டி= அணத்துக்கொண்டு கலுழ்ந்து= கண்ணீர்விட்டு. மாழா= வருந்த. பாங்கு= உரிமை. எழீஇ= எழுந்து. விலங்கலிர்= விலகமாட்டீரா. தொடர்திரோ= நீங்களும் கூடவே உயிர்விடப்போகிறீரா. கலங்கலின் ஆம்கொல்= வருந்துவதால் பயனில்லை. சாதம்= பிறப்பு. பரிபவம்= இழிவு. வீதல்= இறத்தல். கொன்னே= வீணாக. என்னே= என்னபயன். நெருங்கலுக்கு= நெருங்கினால். அவத்தினை விளைக்கும்= இழிவு - துன்பம் தரும். மண்ணுபு= குளிப்பாட்டி. புனைந்து= அலங்கரித்து. பணியாது= தாழ்த்தாமல். உண்ணலுக்காயின= உணவுக்குரியவற்றை. பண்ணலுக்கு= சமைப்பதற்கு.

பொழிப்புரை : என்னை வயிறுநொந்து பெற்ற பெருமைபொருந்திய தாயாரும், பாதுகாத்துப் பேணிய தந்தையும், கொஞ்சி மகிழ்ந்த மனிதரும், திருமணப்பந்தலில் முறைப்படி மணம்செய்துகொண்ட ஒளிரும் அணிகலன் அணிந்த மனைவியும், இளைஞர் முதியர் மற்றும் அனைவரும் தம்முள் கட்டிக்கொண்டு வருந்தி, அணைத்துக்கொண்டு கண்ணீரசிந்தி, ஏங்கி வருந்த, அவர்களைநோக்கி அருகில்இருந்தசிலர் எழுந்துவந்து " விலகமாட்டீரா? இறந்தஇவரைத் தொடர்ந்து உயிர் விடப்போகிறீரா? வருந்துவதால் பயனில்லை! பிறத்தலும் இழிவு, இறத்தலும் இயற்கையே! வீணாக வருந்துவதில் என்னபயன்! இப்பிணத்தை நெருங்கினால் துன்பம்தரும், எனவே இப்பிணத்தைக் குளிப்பாட்டி, ஆடையால் அலங்கரித்து விரைவில் பாடையில் ஏற்றிக் காலம்தாழ்த்தாமல் தூக்குங்கள், அனைவரும் சாப்பிடுவதற்கு உரியனவற்றைச் சமையுங்கள் " என்றுகூறுவதன் முன்னர்;

விளக்கம் : ஆன்மா, பிறப்பினால் வினைபலசெய்து அவற்றின் பயனைத் துய்த்துக் கழிக்க மீண்டும் மீண்டும் பிறப்பும் வினையுமாகப் பல்கிப்பெருகுவது வீடுபேற்றுக்குத் தடையாய் அமைவதால் " சாதமும் பரிபவம் " என்றார். ஒவ்வொரு பிறப்பிலும் வினைகள் பெருகுவதை முறையே " மரம் மரத்தின்வித்து " என்று மெய்கண்டநூல்கள் உவமைகாட்டிவிளக்கும். இதில் மரம் என்பது ஒருபிறப்பையும், வித்து என்பது அவ்வொரு மரம்விளைவிக்கும் பலப்பல வித்துகள் போன்றவினைகளையும் குறிக்கும். அவ்விதைகள் ஒவ்வொன்றும்மரங்கள், மரங்கள்ஒவ்வொன்றும் பற்பல விதைகள் - பிறப்புகள் என்று பல்கிப்பெருகும் என்பதால் " பிறவிப் பெருங்கடல் " என்றார் திருவள்ளுவர்.

அடி 147 - 152. " சோபித நன்னர் ..... காட்சிதந்தருளே "

நான் இறக்குமுன் மயிலேறிய மாட்சிமைபொருந்திய உனதுகாட்சியை எனக்குஅருள்க.

குறிப்புரை : சோபிதம்= அழகு. நன்னர்= மேன்மை. சிகாவளம்= மயில். பவன வேகம்= காற்றின் மிக்கவேகம். கவன் அவாம்= மிக்கவேகத்தை விரும்பும். புரவி= குதிரையாகிய மயில். விடருகா சரணை= இணைபிரியாத திருவடி. படர்= துன்பம். ஒழீஇப் பரித்து= ஒழித்துக்காத்து. இச்சையின் இயங்கிய= உன்விருப்பப்படி இயங்கும். பச்சையம் பிறங்கல்= அழகியபச்சைமலை யாகிய மயில். தக= ஒப்ப. நிமிர்ந்த= மிகமேலான. மாட்சிமை சான்ற= பெருமைபொருந்திய.

பொழிப்புரை : அழகும் மேன்மையும் பொருந்தி, காற்றின் வேகத்தைக் காட்டிலும் மிக்கவேகத்தினை விரும்பிச்செல்லும் குதிரையாகிய மயில்மேல் ஊர்ந்துவந்து, இணைபிரியாத உன்திருவடிகளால் என்துன்பங்களை ஒழித்துக் காத்து, உன்விருப்படி இயங்கும் பச்சைமலையாகிய மயில்மேல் மிகநீண்ட மேருமலைஒப்ப விளங்கும் மேலானதும் மாட்சிமை வடிவானதும் ஆகிய உன்திருக்காட்சியை எனக்குத்தந்து அருள்புரிவாயாக.

திருச்சிற்றம்பலம்